## திராவிட இயக்க இதழ்கள் - அறிவுக்கொடி



சுயமரியாதை இயக்க வீராங்கனையான சிவகாமி 1930-களில் 'அறிவுக்கொடி' என்னும் இதழை நடத்தினார்.

அதே பெயரைக் கொண்ட 'அறிவுக்கொடி' இதழை திராவிட இயக்கச் செயற்பாட்டாளர்களில் ஒருவரான கந்தன் என்பவர் வெளியீட்டாளராகவும் ஆசிரியராகவும் இருந்து நடத்தினார் இது 2005 முதல் 2008 வரை சென்னையிலிருந்து வெளிவந்தது. இதழ் தொடங்கப்பட்ட முதல் ஆண்டு மாத இதழாகவும், பின்னர் இரண்டு ஆண்டுகள் மாதம் இருமுறை இதழாகவும் வெளிவந்தது.

இதழ் தொடங்கியபோது முகப்பு அட்டையில் இதழின் பெயருக்குக் கீழே 'அரசியல் சமுதாய கலை இலக்கிய பகுத்தறிவு இதழ்' என்ற முழக்கத்துடன் வெளிவந்தது. இதழ் வெளியீட்டுடன், 'அறிவுக்கொடி வாசகர் வட்டம்' சார்பாக 'தமிழக வரலாற்றில் திராவிட இயக்கத்தின் தாக்கம்' என்ற தலைப்பில் கருத்தரங்குகளையும் இந்த இதழின் ஆசிரியர் குழு நடத்தி உள்ளது.

இதழில் திராவிட இயக்கத்தின் கொள்கை, சிந்தனை, வரலாறு ஆகியவை தொடர்பான கட்டுரைகள் வெளிவந்துள்ளன. க.திருநாவுக்கரசு, இராதாமணாளன், திருச்சி செல்வேந்திரன் போன்ற திராவிட இயக்க ஆளுமைகள் எல்லாம் இந்த இதழில் பங்களித்துள்ளனர். முரசொலி மாறன் அவர்களின் 'காட்டாறு' என்ற சிறுகதை இந்த இதழில் வெளியாகியுள்ளது.

டி.கே.எஸ்.ஜார்ஜ் என்ற பத்திரிகையாளர் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழில் 'திராவிட இயக்கத்தின் மறைவு' என்கிற ரீதியில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதற்கு மறுப்பு தெரிவித்து க.திருநாவுக்கரசு எழுதிய 'திராவிட இயக்கத்தை அழிக்க முடியுமா?' என்ற கட்டுரையை 'தினமணி' வெளியிட மறுத்துவிட்டது. பிறகு அந்தக் கட்டுரை 'அறிவுக்கொடி'யில் முழுமையாக வெளியிடப்பட்டது. இந்த இதழின் தொகுப்புகள் புத்தகமாகவும் வெளிவந்துள்ளன.

## ஃப்ளாஷ்பேக்





ஆ.க.ம.கீர்த்தி

### மூன்று தலைமுறை கழகக் குடும்பம்!

1993-ஆம் ஆண்டு, கட்சியில் பிளவு ஏற்பட்டிருந்த நேரம், அப்போது மானூர் ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளராக இருந்த எனது தந்தையார் ஆ.க.மணி, என் தாயாருடன் சென்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும் இனமானப் பேராசிரியர் அவர்களையும் சந்தித்து வாழ்த்துப் பெற்ற போது எடுத்த படம். என் தந்தை பின்னர், ஒன்றியக் கழகச் செயலாளர், ஒன்றியப் பெருந்தலைவர், நெல்லை மத்திய மாவட்டக் கழக துணைச் செயலாளர் எனப் பல பொறுப்புகளையும் வகித்தவர். தாத்தா, கங்கைகொண்டான் ஆ.கருப்பையா கழக முன்னோடி. 2005-ஆம் ஆண்டு முப்பெரும் விழா 'கலைஞர் விருது' பெற்றவர்.

**- ஆ.க.ம.கீர்த்தி, மானூர் கிழக்கு ஒன்றியம், திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### தமிழைச் சீர்திருத்திய பெரியார்!

1935-ஆம் ஆண்டு ஜனவரி 13-ஆம் தேதி முதல் 'குடிஅரசு' இதழில், னை, ணை, ளை, லை, னா, ணா, றா ஆகிய வடிவங்களிலான எழுத்துச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தினார் பெரியார். தொடக்கத்தில், தமிழ் அறிஞர்கள் பலரும் பெரியாரைக் கண்டித்தனர். "தகுந்த புலமையும் பாஷா ஞானமும், இலக்கண அறிவும் உள்ளவர்கள் முயற்சிக்காவிட்டால் என்ன செய்வது?" என 20.01.1935 அன்று வெளியான குடிஅரசில் தலையங்கம் மூலம் பதிலளித்தார் பெரியார். இன்று பெரியாரை விமர்சித்து எழுதுபவர்களுக்குக்கூட, அவரின் எழுத்துச் சீர்திருத்தத்தைப் புறக்கணிக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

# மாநாடு

ர.பிரகாசு **44**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




## பெரியாரை விடுதலை செய்க!

*1957-நவம்பரில், அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்திற்காக, பெரியாரும் திராவிடர் கழகத் தொண்டர்கள் சுமார் நான்காயிரம் பேரும் சிறையில் இருந்தனர். பெரியாரின் பேச்சு குறித்து மறைமுகமாக விமர்சித்த பிரதமர் நேரு, பெரியாரைச் சிறையில் தள்ள வேண்டும் என்று 1957-ஆம் ஆண்டு டிசம்பர் 9-ஆம் தேதி தமிழ்நாட்டிற்கு வந்தபோது கூறினார். டிசம்பர் 14-ஆம் தேதி பெரியாருக்கு 6 மாத காலம் சிறைத்தண்டனை உறுதி செய்யப்பட்டது. அந்த சமயத்தில் நாஞ்சில் மாவட்ட தி.மு.க. 2-வது மாநாடு டிசம்பர் 27, 28 ஆகிய தேதிகளில் நாகர்கோவிலை அடுத்த கிருஷ்ணன்கோவிலில் நடைபெற்றது.*

*மாவட்டக் கழக அலுவலகத்தில் இருந்து மாநாட்டுப் பந்தல் வரை 2 மைல் தொலைவுக்குப் பிரமாண்ட பேரணி நடைபெற்றது. மாநாட்டுப் பந்தலில் மாநாட்டுத் தலைவர் ஈ.வெ.கி.சம்பத் கொடியேற்றி வைத்தார். மீண்டும் மாலை 4 மணிக்கு இசைமுரசு 'நாகூர்' ஹனிபாவின் இன்னிசை நிகழ்ச்சியோடு மாநாடு கூடியது. டாக்டர் ஏ.அருணாசலம் மாநாட்டைத் திறந்துவைக்க, வரவேற்புக் குழுத்தலைவர் கி.மனோகரன் நாஞ்சில் மாவட்டக் கழகப் பணிகளையும், மாநாட்டின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். மதுரை முத்து, பொன்னம்பலனார், நாஞ்சில் அன்பெழில், தோழியர் சத்தியவாணி முத்து, என்.வி.நடராசன் ஆகியோர் அடுத்தடுத்து உரையாற்றினர்.*

*பின்னர் மாநாட்டுத் தலைவர் ஈ.வெ.கி. சம்பத் திராவிட நாடு விடுதலையை வலியுறுத்தி முழங்கினார். தலைமையுரைக்குப் பிறகு சி.பி.சிற்றரசு, ப.உ.சண்முகம் ஆகியோர் உரையாற்றினர். இடையே பெருமழை குறுக்கிட்டது. மீண்டும் இரவு 10 மணிக்கு சுசீந்திரம் லலிதா குழுவினரின் நடன நிகழ்ச்சியும், தியாகராச பாகவதரின் இளவல் எம்.கே.கோவிந்தராச பாகவதர் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றன. முதல் நாள் நிகழ்ச்சிகள் நள்ளிரவு 2.30 மணிக்கு முடிவுற்றன.*

*மறுநாள் மாநாட்டிற்கு வருவோருக்காக நெல்லையில் இருந்து நாகர்கோவிலுக்கு சிறப்பு வாகன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இரண்டாவது நாள் மாநாட்டில் பேரறிஞர் அண்ணா, கலைஞர், நாவலர் நெடுஞ்செழியன், என்.வி.நடராசன், ப.உ.சண்முகம், இளம்வழுதி, அன்னை சத்தியவாணி முத்து, காஞ்சி கல்யாணசுந்தரம், வி.பி.இராமன், இரா.செழியன், சி.பி.சிற்றரசு, தாமரைச்செல்வி, ஏ.கோவிந்தசாமி எனப் பெரும் படையினர் தனித்தனி தலைப்புகளில் உணர்ச்சிப் பிழம்பாய் உரையாற்றினர்.*

*கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் மறைவுக்கு இரங்கல், ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு பஞ்சப்படியை உயர்த்த வேண்டும், தென்னாட்டு மக்கள் அரிசியைக் குறைத்துக்கொண்டு கோதுமை உணவுப் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்ற ஒன்றிய அரசின் கருத்துக்கு கண்டனம், 'நெய்யாற்றின் கரை', 'தேவிகுளம்', 'பீர்மேடு', 'செங்கோட்டை'யின் சில பகுதிகள் என தமிழர்கள் வாழும் பகுதிகளை மீண்டும் தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும், இந்தித் திணிப்பைக் கைவிடல் வேண்டும் என்பன உட்பட 15 தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.*

*அதில் 15-ஆவது தீர்மானம் 'பெரியாரை விடுதலை செய்க' என்பதாகும். "பெரியாரையும், ஆயிரக்கணக்கான தோழர்களையும் தோழியர்களையும் சிறையில் வைத்திருக்கிறது இந்த சர்க்கார். பெரியாரை விடுதலை செய்து, ஜாதி ஒழிப்புக்கான வழிவகைகளைக் காண இந்த சர்க்கார் முன்வர வேண்டும். பெரியாரின் அறிவாற்றல், பொதுமக்களிடம் அவருக்குள்ள செல்வாக்கு ஆகியவற்றை யோசித்துப் பார்க்காமல் பேசிய நேருவை இம்மாநாடு கண்டிக்கிறது" என்பது அத்தீர்மானம். அண்ணாவே முன்மொழிந்தார். மறுநாள் நடைபெற்ற பொதுக்குழுவிலும் பெரியார் விடுதலை வற்புறுத்தப்பட்டது. பெரியாரிடமிருந்து இயக்கமாய் பிரிந்திருந்தாலும் இதயமாய் இணைந்தே இருந்தார் அண்ணா.*

**மறுநாள் நடைபெற்ற பொதுக்குழுவிலும் பெரியார் விடுதலை வற்புறுத்தப்பட்டது. பெரியாரிடமிருந்து இயக்கமாய் பிரிந்திருந்தாலும் இதயமாய் இணைந்தே இருந்தார் அண்ணா.**

**...கூட்டம் திரளும்**

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் **44**

**"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## தியாகக் களங்களும்... தீரா வேட்கையும்!

*புனைவிலக்கியத்தில் அரசியல் படைப்புகள் வெளிவருவது அரிதாகி வரும் சூழலில், நான்கு தலைமுறையின் வாழ்வியலைப் பேசும் அரசியல் நாவலாக கவனம் ஈர்க்கிறது, **'தீராக் களம்'**. ஆழ்ந்த வரலாற்றுப்புரிதலோடு எழுத்தாளர் பாட்டாளி எழுதியிருக்கும் இந்த நாவலை, அழகான வடிவமைப்பில் கருப்பு சிவப்பு அட்டையுடன் 'பாரதி புத்தகாலயம்' வெளியிட்டுள்ளது.*

*தமிழ்நாட்டின் தென்பகுதியான மதுரை, இந்நாவலில் கதைக்களமாக எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. 18 மற்றும் 19-ஆம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற மூன்று முக்கியமான அரசியல் போராட்டங்களைக் கொண்டு நாவல் நகர்கிறது.*

*அகத்தை விட புறமும், தனி வாழ்வை விட பொது வாழ்வும் முக்கியமென கருதி வாழ்ந்த மனிதர்களால் இந்த நாவல் நிரம்பியுள்ளது. கொள்கை, கோட்பாடு, லட்சியம் போன்றவற்றுக்காகத் தங்களுடைய உயிரைக்கூட துச்சமென கருதும் லட்சியவாத மனிதர்களாக இதில் வரும் நாயகர்கள் இருக்கிறார்கள்.*




*'உழுபவருக்கு நிலம் சொந்தம்' என்ற வேட்கையோடு ஜமீன்களுக்கு எதிராக எளிய மக்களால் முன்னெடுக்கப்பட்ட நிலவுரிமை போராட்டம், பண்டிகைக் கால வெகுமதி வேண்டியும் உழைப்புச் சுரண்டலை எதிர்த்தும் முதலாளிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்கப் போராட்டம், பண்பாட்டு ஆதிக்கம் செலுத்தும் நோக்கில் கொண்டு வரப்பட்ட இந்தித் திணிப்பை எதிர்த்து 20-ஆம் நூற்றாண்டில் தமிழ்நாடு முழுக்க நடைபெற்ற மொழி உரிமைப் போராட்டமும்தான் இந்த நாவலில் பிரதான களங்கள்.*

*தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தோழர் ஜீவா, நாவலர் நெடுஞ்செழியன் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்கள் இந்த நாவலில் அங்கங்கே வந்து செல்கிறார்கள்.மொழிப் போராட்டத்தின்போது கல்லூரி மாணவர்கள் தமிழ் ஆசிரியர்களின் பாதுகாப்பில் எப்படி தன்னெழுச்சி பெற்று மொழி உரிமைக்காகப் போராடினர் என்பதை வாசிக்கும்போது வியப்பை ஏற்படுத்துகிறது. காவல்துறை இந்தப் போராட்டங்களை ஒடுக்கிய விதத்தை வாசிக்கையில், இதுவரை முழுதாகப் பதிவு செய்யப்படாதது வரலாற்று, அவலம் எனத் தோன்றுகிறது.*

*கல்வி அறிவு இல்லாத போதும், நாம் சுரண்டப்படுகிறோம் என்ற சுயமரியாதை உணர்வு ஏற்பட்டதன் காரணமாக, உழைக்கும் மக்களும், தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களும் அமைப்பாக திரண்டு ஆதிக்கவாதிகளுக்கு எதிராக கிளர்ந்தெழ தொடங்குகிறார்கள். அந்தக் கிளர்ச்சி 18-ஆம் நூற்றாண்டிலும் 19-ஆம் நூற்றாண்டிலும் எப்படி நடைபெற்றது என்பதை மிக நுணுக்கமாகவே வரலாற்றுத் தரவுகளுடன் கதையாக நமக்குக் கடத்துகிறார் பாட்டாளி.*

*இந்த மூன்று போராட்டங்களின் போதும் மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள், நெருக்கடிகள், இன்ப துன்பங்கள் என அனைத்தையும் மிகத் துல்லியமாகவே பதிவுசெய்திருக்கிறார்.*

*இன்றைக்கும் ஏதோ ஒரு வகையில் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலவுரிமைப் போராட்டத் திற்காகவும், தொழிற்சங்கப் போராட்டத்திற்காகவும், மொழியுரிமைப் போராட்டத்திற்காகவும் உயிரை தியாகம் செய்த மனிதர்களின் வாழ்க்கையைப் பேசும் 'தீராக் களம்'நாவல் 2024-ஆம் ஆண்டு வெளியாகி இருக்கும் முக்கியமான அரசியல் புனைவு நாவல் என்பதை அழுத்தமாகப் பதிவு செய்யலாம்.*

**...வாசிப்போம்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**706**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131